பகுதிகளிலே கிணறு அமைப்பதற்குத் துறை முன்வந்து, விரைவிலே அந்தக் கிராமங்களுக்கு நல்ல, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு லா. சந்தானம். கேள்வி, கன்னியாகுமரி மாவட்டம் தொடர்புடையது.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களாகிய மதுரை, திண்டுக்கல் போன்ற மாவட்டங்களிலே மிகக் கடுமையான வறட்சி நிலவுகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தையும் சேர்த்துக்கொள்கிறேன். அங்குக் குடிநீருக்காக மிகுந்த சிரமத்தை மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அங்கு இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எல்லாம் அந்த குடிநீர்க் குறையைப் போக்குவதற்கு அரசிடத்திலே இருந்து நிதியை எதிர்பார்க்கிறார்கள். அம்மா அவர்கள்கூட முதன்முதலாகக் கையெழுத்திட்ட கோப்பும், குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்காகத்தான் என்பதை நாம் அறிகிறோம். அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற குடிநீர்த் தட்டுப்பாட்டைத் தீர்ப்பதற்கு உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்யப்படுமா அல்லது செய்யப்பட்டிருக்கிறதா என்பதனை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வறட்சியைக் கருத்திற்கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் அறிக்கை பெற்று, எந்தெந்தப் பகுதிகளிலே குடிநீர்த் தட்டுப்பாடு இருக்கும் என்பதை எல்லாம் அரசு பரிசீலனை செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாகக் குறைந்த அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கேள்வியில்கூட நீங்கள் கேட்கலாம். அடுத்த கேள்வியும், குடிநீர் சம்பந்தமானதுதான். உட்காருங்கள்.

வினா எண் 115, திரு. க. பாரமலை, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

2002 ஏப்ரல் 10]

115—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***3682—திரு. க. பாரமலை:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைகை ஆற்றில் பழவராயனேந்தல் அருகில் ஆழ்கிணறு தோண்டி ஆவரங்காடு, தஞ்சாக்கூர் உள்ளிட்ட கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட கூட்டுக்குடிநீர் வழங்கும் திட்டம் தற்சமயம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) விரைவாக இத்திட்டத்தை முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை ஒன்றியத்தைச் சார்ந்த தஞ்சாக்கூர் மற்றும் ஏழு குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்க திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு, விரைவிலே அந்தப் பகுதிகளுக்குத் தண்ணீர் வழங்கப்படுவதற்கு வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. பாரமலை, சுருக்கமாகக் கேள்வி கேட்கப் போகிறார்.*

முற்பகல் 10-30

திரு. க. பாரமலை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்கிறார். நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கோடையினுடைய கொடூரம் ஆரம்பமாகிவிட்டது. சமீபகாலத்திலே வைகையிலே அதிகமான தண்ணீரும் திறந்து விடப்படவில்லை. நிலத்தடி நீரும் வெகுவாகக் குறைந்திருக்கிறது. விரைவாக ஏற்பாடு செய்யவில்லை என்றால், அரசு, லாரியிலே தண்ணீர் கொண்டுவந்து வழங்கக்கூடிய அளவுக்கு நிலைமை மோசமாகப் போய்விடும். ஆகவே, விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வேண்டுமென்ற அடிப்படையில் எவ்வளவு காலகட்டத்திற்குள் அந்த வேலை முடிக்கப்படும்; மக்கள் பயன்பாட்டுக்குத் திறந்துவிடப்படும் என்பதை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை இந்தப் பகுதிக்குச் செயல்படுத்தும் திட்டத்தில் சோதனை ஓட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சோதனை ஓட்டம் முடிந்தவுடன் அந்தப் பகுதிகளுக்குத் தண்ணீர் விநியோகம் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. மணி.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்விக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் பதிலைச் சொல்கிறபோது, அதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்வதாகச் சொன்னார்கள்; என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அந்தப் பகுதியில் அதிகப்படியான பணம் செலவிட வேண்டிய ஒரு காலகட்டமல்ல, இப்போது இருக்கிற நிலை. இருந்தாலும்கூட, இந்தக் கோடைகாலத்தில் அங்கு நீராதாரத்தைக் கண்டுபிடித்து இரண்டு கிணறுகளை அமைத்தாலே அந்த வட்டார மக்களுக்கு முழுமையான தண்ணீரைத் தர முடியும். அதற்கான source, அந்தப் பகுதியிலே இருக்கிறது. அதை விரைவாக அமல்படுத்துவதற்குக் குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளோடு கலந்து, அதற்குப் போதுமான நிதியாதாரத்தை ஒதுக்கி, அந்தக் கிராமத்து மக்களுடைய குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க துரித நடவடிக்கையை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் நானும் பேசுகிறபோது, இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு ரூபாய் செலவாகும் என்று கேட்டேன். இதற்காக 20 இலட்சம் ரூபாய் என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். 20 இலட்சம் ரூபாய் என்பது அதிகமான தொகைதான். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, துறையின் மூலம் எவ்வளவு விரைவாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முடியுமோ, அந்த அளவுக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோ. இரவிராஜ்.

2002 ஏப்ரல் 10]

திரு. கோ. இரவிராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டத்தில் கடந்த வருடம் குடிநீர்ப் பஞ்சத்தால் பல கிராமங்களிலே மக்கள் பெரிதும் அவதிப்பட்டார்கள். குறிப்பாக திருவள்ளூர் நகரத்திலே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரவிராஜ், அவரவர் பகுதிக்குத் தனிக் கேள்வி போட்டால்தான் தெரியும். அமைச்சரிடம் பதில் இருக்காது.

வினா எண் 116, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

116—

கூட்டுறவுக் கடன்கள்

***238—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இயற்கைச் சீற்றத்தால் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ள விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்து விவசாயிகளின் துயர் துடைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்ய இயலாத நிலை உள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.